திரு. து. ப. அழகமுத்து : அங்கு பிரயாணிகள் வந்து பார்ப்ப தற்கு வசதியாக இருக்க அந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய ஏதாவது திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : பேர்ட்ஸ் சாங்க்சுவரி நம் ஸ்டேட்டில் 16 இருக்கின்றன. இதையும் சேர்த்து 16, என்று கணக்கில் வைத்திருக்கிறோம். சமீபத்தில் கூட பார்த்திருக்கலாம். வேடந்தாங்கலில் பல சௌகரியங்கள் செய்து கொடுத்திருக்கிறோம். நான்காவது ப்ளானில் கொஞ்சம் கொஞ்சமாக நிதி ஒதுக்கி பல வேலைகள் செய்யப்படுகின்றன.

Multi-purpose Fisheries Project

*16 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether the Government have proposed to establish a multi-purpose Fisheries Project at Tuticorin ;

(*b*) whether any aid from UNICEF has been sought for in respect of the same; and

(*c*) if so, the details thereof?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : தூத்துக்குடியில் இல்லாவிட்டாலும் நம் மாநிலத்தில் வேறு எங்கேயாவது இதுபோன்ற பலநோக்கு மீனளத் திட்டம் ஆரம்பிக்க உத்தேசிக்கப்படுள்ளதா ?

(பதில் இல்லை.)

இயந்திரப் படகுகள்

*17 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இயந்திரப் படகுகளுக்குத் தேவையான சாமான்கள் கிடைப்பதில் சிரமம் இருக்கிறதா ?

(இ) இயந்திரப் படகுகளுக்குத் தேவையான உள்நாட்டு தயாரிப்பு சாமான்கள் வெளியிலிருந்து இறக்குமதி செய்யும் சாமான்களைவிட விலை ஏற்றம் உள்ளதாகவும், வலு குறைந்ததாக வும் இருக்கின்றது என்பது உண்மையா ?

(உ) அப்படியானல் அத்தகைய சாமான்களை வெளியிலிருந்து இறக்குமதி செய்வதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் என்ஜின்கள் தேவைப்படும் அளவுக்குக் கிடைப்பதில்லை. மீன் பிடி விசைப்படகுகளைக் கட்டுவதற்குத் தேவைப்படும் செப்பு, பித்தளை உலோகங்களும் வேண்டிய அளவுக்கு உள்நாட்டில் கிடைப்பதில்லை.